# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க,
## சமுர்த்தி (திருத்தச்) சட்டம்

---

**[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]**

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

2025, ஓகத்து மாதம் 22 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா. 20.00** **தபாற் செலவு : ரூபா. 150.00**

*இச்சட்டத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமுர்த்தி (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ. -ஓ 52/2024

## 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்தி சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, சமுர்த்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்கச் சட்டத்தில் 28அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சமுர்த்தி சட்டத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் அச்சட்ட வாக்கத்தின் 28அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"சமுர்த்தி சமுதாய அடிப்படை யிலான வங்கிகளினது கணக்குகளின் கணக்காய்வு

**28அ.** பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பினது 154 ஆம் உறுப்புரை யின் ஏற்பாடுகளும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகளினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 35அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 35 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் அச்சட்டவாக்கத்தின் 35அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"சமுர்த்தி சமுதாய அடிப்படை யிலான வங்கித் தொழிற் சங்கங் களினது கணக்குகளின் கணக்காய்வு

**35அ**. பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளின் கணக்காய்வு தொடர்பாக அரசியலமைப்பினது 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கித்தொழிற் சங்கங் களினது கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்